# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.

தொலைபேசி : 044– 22201337

மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in


முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

**ஆணை எண். 58/ந/2024**

**நாள்.05.11 .2024**

திரு. V.கணேசன்,
தேவக்கோட்டை, சிவகங்கை மாவட்டம் – முறையீட்டு மனுதாரர்

நகராட்சி ஆணையாளர்,
தேவக்கோட்டை நகராட்சி, சிவகங்கை – எதிர்மனுதாரர்

சிவகங்கை மாவட்டம், தேவக்கோட்டை, எஸ்.எஸ்.கோவில் தெரு, , கைலாசநாதபுரம் மேற்கு கதவு எண்.12ஜி என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V.கணேசன் என்பவரின் 13.04.2024 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 16.04.2024 அன்று பெறப்பட்டு, 58/ந/2024 என்ற எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணை வெளியிடப்படுகிறது.

## ஆணை

சிவகங்கை மாவட்டம், தேவக்கோட்டை, எஸ்.எஸ்.கோவில் தெரு, , கைலாசநாதபுரம் மேற்கு கதவு எண்.12ஜி என்கிற முகவரியில் வசிக்கும் திரு. V.கணேசன் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ள தனது புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார் :-

“எனது வீட்டிற்கு அருகிலுள்ள காலிமனையிடத்தில் வளர்ந்த வீட்டிற்கு விறகுக்காக பயன்படுத்தி வந்த கருவேல மரங்களை 21.12.2023 அன்று எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி, தேவக்கோட்டை நகராட்சி அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு. விக்கி என்ற திரு. கோ.விக்னேஸ்வரன் மற்றும் துப்புரவு பணியாளார் திரு. பாண்டி ஆகியோர், விறகிற்காக

வளர்த்த எனது கருவேல மரங்களை வெட்டி சாய்த்துக் கொண்டிருந்த போது, மரத்தை வெட்ட வேண்டாம், இடையூறாக இருந்தால் பணியாளரை வைத்து வெட்டிக் கொள்ளுகின்றேன் என கேட்டுக் கொண்டதற்கு திரு. கோ.விக்னேஸ்வரன் அப்படி தான் மரங்களை வெட்டி எறிவேன், தடுத்தால் உன்னையும் வெட்டி எறிவேன் நான் இந்த பகுதியின் நகராட்சி கவுன்சிலர் என நேரடியாக கொலை மிரட்டல் விடுக்கிறார்.

எனது பட்டா இடத்தில் வீட்டு உபயோகத்திற்காக பயன்படுத்தி வந்த கருவேல மரங்களை எந்தவொரு முன்னறிவிப்பு செய்யாமல், நகராட்சி நிர்வாகத்தில் பணியாற்றுவதால் அதிகாரத்தினையும், நகராட்சி கவுன்சிலர் என்ற அதிகார தோரணையையும் பயன்படுத்தி, அருவாளை காட்டி, வெட்டி சாய்த்து விடுவேன் என்று மிரட்டியதால், நானும், எனது குடும்பத்தினரும் மிகவும் மன உளைச்சலுக்கு ஆளாகி இருக்கின்றோம்.

இது குறித்து, தேவகோட்டை நகராட்சி ஆணையர் அவர்களுக்கு கடந்த 21.12.2023 அன்று இளநிலை உதவியாளர் திரு. கோ.விக்னேஸ்வரன் அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்தி, அதிகார துஷ்பிரயோகம் மற்றும் கொலை மிரட்டல் விடுத்தல், அதன் காரணமாக மிகவும் மன உளைச்சலுக்கும் வேதனைக்கும் ஆளாகியது போன்ற செயல்களுக்கு துறை ரீதியான தக்க ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டி அளித்த புகார் மனு மீது இன்று வரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை.

இந்நிலையில் நகராட்சி அலுவலகத்தில் இருந்து பெறப்பட்ட அறிவிப்பு கடிதத்தின் படி கடந்த 07.03.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகிய போது, நகராட்சி மேலாளர் சார்பாக விசாரணை செய்த கணக்காளர் திரு.சுரேஷ் என்பவர் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு நான் மின்னஞ்சல் வாயிலாக சமர்ப்பித்த புகார் மனு போன்று ஒரு பொய்யான புகார் மனுவை சமர்ப்பித்துள்ளார். இது குறித்து விசாரணை அலுவலரிடம் வினவிய போது, இது நான் அளித்த மனு என்றும், இதன் மீது நீங்கள் அறிக்கை தாக்கல் செய்தால்தான் தாங்கள் அளித்த புகார் மனுவினை முடிக்க முடியும் என்று தெரிவித்த கருத்தில் உடன்பாடு இல்லையென்பதால், நான் எந்த ஒரு விளக்க அறிக்கையும் தாக்கல் செய்யவில்லை.

மேலும் நகராட்சி அலுவலகத்தில் இருந்து மறுபடியும் பெறப்பட்ட அறிவிப்பு கடிதம் தொடர்பாக, நகராட்சி ஆணையர் அவர்களை நேரில் சந்தித்து விளக்கம் அளிக்கவும் முன் அனுமதி வேண்டி மின்னஞ்சல் வாயிலாக அளித்த விண்ணப்பத்திற்கு எந்த தகவலும் கிடைக்கப்பெறவில்லை.

எனவே, தேவகோட்டை நகராட்சியின் இளநிலை உதவியாளராகப் பணிபுரியும் திரு. கோ.விக்னேஸ்வரன் மீது அளித்த புகார் மனு மீது துறை ரீதியான விசாரணை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டியும், மேலும் வேண்டுமென்றே காழ்ப்புணர்ச்சியுடன் நான் அளித்தது போன்ற பொய் புகார் மனு தயார் செய்து என்மீதும் என் குடும்பத்தினர் மீதும் அவதூறு பரப்பி, மிகுந்த மன உளைச்சலுக்கு ஆளாக்கிய தேவகோட்டை நகராட்சி அதிகாரிகள் மீது துறை ரீதியான விசாரணை மற்றும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்க உத்தரவிட வேண்டும் ” என இம்முறைமன்ற நடுவத்தைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

2. மனுதாரரின் புகார் மனு குறித்து தேவக்கோட்டை நகராட்சி, ஆணையாளரிடம் இம்முறைமன்ற நடுவத்தின் 29.07.2024 நாளிட்ட அறிவிப்பு மூலம் அறிக்கை கோரப்பட்டது.

3. தேவக்கோட்டை நகராட்சி ஆணையாளர் தனது 13.08.2024 நாளிட்ட அறிக்கையில் கீழ்க்கண்ட விவரங்களை தெரிவித்துள்ளார்:

"மனுதாரரின் புகார் மனுவில் தெரிவித்துள்ள விவரத்தின்படி தேவக்கோட்டை நகராட்சியில் பணிப்புரியும் திரு. கோ.விக்னேஸ்வரன் இளநிலை உதவியாளரிடம் குறிப்பாணை வழங்கி விளக்கம் கோரப்பட்டது. இது தொடர்பாக புகார் மனுதாரரை 01.03.2024 மற்றும் 12.03.2024 ஆகிய தேதிகளில் விசாரணைக்கு நேரில் அழைக்கப்பட்டும் மனுதாரர் நேரில் ஆஜராகவில்லை.

தேவக்கோட்டை நகராட்சி பணியாளர் திரு. கோ.விக்னேஸ்வரன் மீது கொலை மிரட்டல், அதிகார துஷ்பிரோயகம், விண்ணப்பத்திற்கு முரணாக வேறொரு விண்ணப்பத்தினை வைத்து கணக்காளர் விசாரணை செய்தது போன்றவற்றை தெரிவித்து, உள்ளாட்சி நடுவர் மன்ற ஆணையத்திற்கு அனுப்பப்பட்ட விண்ணப்பம் மீது மீண்டும் சம்பந்தப்பட்ட பணியாளர் திரு. கோ.விக்னேஸ்வரன், இளநிலை உதவியாளர் மற்றும் திரு.பா.சுரேஷ்குமார், கணக்காளர் மற்றும் சுகாதார பணியாளர் திரு.ப.பாண்டி ஆகியோரிடம் விளக்கம் பெறப்பட்டது.

திரு.ப.பாண்டி, தேவக்கோட்டை நகராட்சி சுகாதாரப் பணியாளரின் விளக்கத்தில் கடந்த 21.12.2023 அன்று துாய்மை பணி மேற்பார்வையாளர் திரு.சக்திவேல் என்பவரின் உத்திரவின்பேரில் கைலாசநாதபுரம் கேத்தரின் பள்ளிக்கு செல்லும் சிமெண்ட் சாலையில் பள்ளிக் குழந்தைகளின் போக்குவரத்திற்கு இடையூறாக இருந்த சாலையில் விழுந்த முழுக் கிளைகள் மற்றும் எருக்கஞ்செடிகளை அப்புறப்படுத்தி கொண்டிருந்தபோது திரு.வ.கணேசன் என்பவர் எனது இடத்தில் உள்ள செடிகளை எப்படி வெட்டுவாய் என்று தனது பணிக்கு எதிர்ப்பு தெரிவித்து, நான் சுகாதார பணியாளர் என்றும் பாராமல் பணி செய்ய விடாமல் தர குறைவாய் பேசினார். அப்போது அவ்வழியாக வந்த நகராட்சி ஊழியர் திரு. கோ.விக்னேஸ்வரன் என்பவரிடம் விவரம் தெரிவித்தேன். அப்போது திரு.வ.கணேசன் என்பவர் திரு. கோ.விக்னேஸ்வரன் அவர்களையும் தரக்குறைவாக பேசியதால் திரு.வ.கணேசன் மீது காவல் துறையில் புகார் தெரிவித்துள்ளார். காவல் நிலையத்தில் திரு.வ.கணேசன் என்பவர் மீது புகார் செய்யப்பட்டதில் திரு. வ.கணேசன் அவர்கள் காவல்நிலையத்தில் மன்னிப்பு கோரியதால் புகார் மனுவை திரும்பப் பெற்றுக்கொள்வதாக தெரிவித்துள்ளார்.

புகார் மனுவில் கண்டுள்ள விவரம் குறித்து நகராட்சி அலுவலகத்தில் பணிபுரியும் திரு.சுரேஷ்குமார் கணக்காளரின் விளக்கத்தில், புகார்தாரர் திரு.வ.கணேசன் 07.03.2024 அன்று விசாரணைக்கு ஆஜராகவில்லை. இதனை அப்போதைய மேலாளர் திரு.ராஜேஷ்வரன் என்பவர் 12.03.2024ம் தேதி குறிப்புக் கோப்பில் பதிவு செய்துள்ளதாகவும் தனக்கு மேலாளர் கூடுதல் பொறுப்பு வழங்கப்பட்டதால் மேற்கொண்டு விசாரணை நடத்த இயலவில்லை என்றும், தன்மீது வேண்டுமென்றே வீண் புகார் தெரிவித்துள்ளதாக விளக்கம் சமர்ப்பித்துள்ளார்.

எனவே, இந்நகராட்சி பணியாளர்களிடம் நடத்தப்பட்ட விசாரணை மற்றும் அவர்களின் விளக்கங்களின் அடிப்படையில் புகார் மனுதாரர் திரு.வ.கணேசன் என்பவரது புகார் மனு

உண்மைக்கு மாறானதாக உள்ளதாக தெரிய வருகிறது என்றும், மனுதாரரின் மனுவை தள்ளுபடி செய்யுமாறும் இம்முறைமன்ற நடுவத்திற்கு தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான தேவக்கோட்டை நகராட்சி ஆணையாளர் ஆகியோரை 17.09.2024 அன்று இம்முறைமன்ற நடுவத்தில் நடைபெறவிருக்கும் விசாரணைக்கு வருகை தந்து விளக்கம் அளிக்குமாறு இம்முறைமன்ற நடுவத்தின் மூலமாக 30.08.2024 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன. இந்நிலையில் 17.09.2024 அன்று அரசு விடுமுறை அறிவிக்கப்பட்டதால், விசாரணையை 30.09.2024க்கு மாற்றியமைக்கப்பட்டு, மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான தேவக்கோட்டை நகராட்சி ஆணையாளர் ஆகியோரை 30.09.2024 அன்று விசாணைக்கு ஆஜராகுமாறு 10.09.2024 நாளிட்ட அழைப்பாணைகள் மூலம் தகவல் தெரிவிக்கப்பட்டன.

5 மனுதாரர் திரு. வ. கணேசன் என்பவர் 30.09.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகவில்லை. இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ள 03.09.2024 நாளிட்ட மின்னஞ்சல் கடிதத்தில் இந்நேர்வில் தான் அளித்துள்ள முறையீட்டு மனுவானது தவறானவர்களின் தூண்டுதலின் பேரில் அளிக்கப்பட்டதாக தெரிவித்து, முறையீட்டு மனு சம்பந்தமாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என கேட்டுக்கொண்டுள்ளார்.

6. எதிர்மனுதாரரான சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை நகராட்சி மேலாளர் திரு. பி. சுரேஷ்குமார் என்பவர் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் 30.09.2024 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரடியாக ஆஜராகி, தனது வாக்குமூலத்தை பதிவு செய்துள்ளார்.

21.12.2023ம் தேதி தேவகோட்டை நகராட்சியில் தமிழ்நாடு முதலமைச்சரின் சிறப்பு திட்டமான மக்களுடன் முதல்வர் முகாம் பணியில் இருந்த இந்நகராட்சி இளநிலை உதவியாளர் திரு. கோ.விக்னேஸ்வரன் அலுவலக பணியாக வரும் வழியில் நகராட்சி தூய்மை பணியாளர் திரு பாண்டி என்பவர் சாலையில் விழுந்த கருவேல மரத்தின் முள் கிளையினை வெட்டி சுகதார பணிகள் செய்தபோது திரு வ.கணேசன் என்பவர் நகராட்சி பணியாளர் திரு பாண்டி என்பவரை பணி செய்ய விடாமல் தடுத்து தரக்குறைவாக பேசியதாகவும், அவ்வழியாக வந்த திரு. கோ.விக்னேஸ்வரன் இளநிலை உதவியாளரிடம் விவரத்தினை தெரிவித்த போது, சுகாதார ஆய்வாளரிடம் தெரிவித்து நடவடிக்கை மேற்கொள்ள இருந்த காரணத்தால் திரு. கோ.விக்னேஸ்வரன் மனுதாரர் தரக்குறைவாக பேசியதால் காவல்துறையில் புகார் செய்து பின்னர் புகார் மனுதாரர் திரு.வ.கணேசன் மன்னிப்பு கோரியதால் புகார் மனுவினை காவல்துறையிலிருந்து திரும்ப பெற்றுள்ளதாகவும், தெரிவித்துள்ளார்.

திரு.பாண்டி தேவகோட்டை நகராட்சி சுகாதார பணியாளரின் விளக்கத்தில் நிரந்தர சுகாதார பணியாளராக சுமார் 20 ஆண்டுகள் தேவகோட்டை நகராட்சியில் பணியாற்றி வருவதாகவும், கடந்த 21.12.2023 அன்று தூய்மைப்பணி மேற்பார்வையாளர் திரு.சக்திவேல் என்பவரின் உத்தரவின் பேரில் கைலாசநாதபுரம் கேத்தரின் பள்ளிக்கு செல்லும் சிமென்ட் சாலையில் பள்ளி குழந்தைகள் போக்குவரத்திற்கு இடையூராக இருந்த சாலையில் விழுந்த

முள்கிளைகள் மற்றும் எருக்கஞ்செடிகளை அப்புறப்படுத்தி பணி செய்து கொண்டு இருந்த போது மனுதாரார் திரு.வ.கணேசன் என்பவர் எனது இடத்தில் உள்ள செடிகளை எப்படி வெட்டுவாய் என எனது பணிக்கு எதிர்ப்பு தெரிவித்து நான் ஒரு சுகாதார பணியாளர் என்றும் பாராமல் என்னை பணி செய்ய விடாமல் தரக் குறைவாகவும், அசிங்கமாவும் பேசினார். அவ்வழியாக வந்த நகராட்சி ஊழியர் திரு. கோ.விக்னேஸ்வரன் என்பவரிடம் விபரத்தினை தெரிவித்தபோது திரு. கோ.விக்னேஸ்வரன் என்பவரையும் திரு.வ.கணேசன் அவர்கள் தரக்குறைவாகவும், அசிங்கமாகவும் பேசியதால் திரு. கோ.விக்னேஸ்வரன் அவர்கள் திரு.வ.கணேசன் மீது காவல்நிலையத்தில் புகார் அளித்ததற்கான விபரம் தெரிந்து கொண்டேன் என தெரிவித்துள்ளார்.

மேலும் புகார் மனுவில் கண்டுள்ள விபரம் குறித்து இவ்வலுவலக கணக்காளர் திரு சுரேஷ்குமார் என்பவரின் விளக்கத்தில் புகார்தாரர் திரு.வ.கணேசன் என்பவர் 07.03.2024ம் தேதியன்று விசாரணைக்கு ஆஜராகவில்லை என அப்போதைய மேலாளர் திரு.ராஜேஸ்வரன் என்பவரால் 12.03.2024 தேதிய குறிப்பு கோப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கொண்டு மேற்படி விசாரணையை தம்மால் நடத்தப்படவுமில்லை எனவும், தமக்கு மேலாளர் கூடுதல் பொறுப்பு 07.06.2024 முதல் வழுங்கப்பட்டுள்ளதாகவும் தன் மீது வேண்டுமென்றே புகார் தெரிவித்துள்ளதாக விளக்கம் சமர்ப்பித்துள்ளார்.

இவ்வலுவலக பணியாளர்களிடம் நடத்தப்பட்ட விசாரணை மற்றும் அவர்களின் விளக்கங்களின் அடிப்படையில் புகார் மனுதாரர் திரு கணேசன் என்பவரது புகார் மனு உண்மைக்கு மாறானதாக உள்ளது. மனுதாரர் திரு.வ.கணேசன் என்பவரின் புகார் மனுவில் எந்தவித உண்மைத் தன்மையும் இல்லை என்பதற்கு ஆதாரமாக நகராட்சி பணியாளர்களின் விளக்கத்தின் நகல்களை இம்முறைமன்ற நடுவத்தில் சமர்ப்பித்துள்ளார்.

தேவகோட்டை நகராட்சி அலுவலக பணியாளர்களிடம் நடத்தப்பட்ட விசாரண மற்றும் அவர்கள் அளித்துள்ள விளக்கங்களின் அடிப்படையில் மனுதாரர் திரு.வ.கணேசன் என்பவரது புகார் உண்மைக்குப்புறம்பானதாக உள்ளதை இம்முறைமன்ற நடுவத்தில் தெரிவித்து புகார் மனுவை தள்ளுபடி செய்யும்படி கேட்டுக்கொண்டுள்ளார்.

7. மனுதாரரின் புகார் மனு மற்றும் அவரது மின்னஞ்சல் கடிதம், தேவகோட்டை நகராட்சி ஆணையரின் விளக்க அறிக்கை மற்றும் தேவகோட்டை நகராட்சி மேலாளரின் வாக்குமூலம் மற்றும் தொடர்புடைய ஆவணங்களை இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டன.

"முறையீட்டு மனுதாரரின் புகார் மனுவில் தனது வீட்டிற்கு அருகிலுள்ள காலிமனையிடத்தில் வளர்ந்த வீட்டிற்கு விறகுக்காக பயன்படுத்தி வந்த கருவேல மரங்களை எந்தவொரு முன்னறிவிப்பும் இன்றி, தேவக்கோட்டை நகராட்சி அலுவலக பணியாளர்கள் வெட்டி சாய்த்துக் கொண்டிருந்த போது, மரத்தை வெட்ட வேண்டாம், இடையூறாக இருந்ததால் அம்மரங்களை மனுதாரரே வெட்டிக் கொள்ளுகின்றேன் என கேட்டுக் கொண்டுள்ளார்.

தேவகோட்டை நகராட்சி மேலாளரின் வாக்கு மூலத்தில், இந்நகராட்சி இளநிலை உதவியாளர் திரு. கோ.விக்னேஸ்வரன் அலுவலக பணியாக வரும் வழியில் நகராட்சி தூய்மை பணியாளர் திரு பாண்டி என்பவர் சாலையில் விழுந்த கருவேல மரத்தின் முள் கிளையினை வெட்டி சுகதார பணிகள் செய்தபோது திரு.வ.கணேசன் என்பவர் நகராட்சி பணியாளர்களை தரக்குறைவாக பேசியதால் காவல்துறையில் புகார் செய்துள்ளனர். காவல் துறையில் புகார் அளித்ததன் காழ்ப்புணர்ச்சியால் புகார் மனு அளித்து, விசாரணை மேற்கொண்டதால் திரு.வ.கணேசன் அவர்கள் மன்னிப்பு கேட்டதனடிப்படையில் புகார் மனு திரும்ப பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதன் காரணமாக திரு.வ.கணேசன் அவர்கள் புகார் மனுவை இம்முறைமன்ற நடுவத்திற்கு அனுப்பியுள்ளார். எனவே மனுதாரர் புகார் மனுவில் எவ்வித உண்மையும் இல்லை என தெரிவித்துள்ளார்.

மேற்காணும் சூழ்நிலையில் மனுதாரர் திரு. வ.கணேசன் என்பவர் நேரடி விசாரணைக்கு ஆஜராகாததாலும், இம்முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்துள்ள 03.09.2024 நாளிட்ட மின்னஞ்சல் கடிதத்தில் தான் அளித்துள்ள முறையீட்டு மனுவானது தவறானவர்களின் தூண்டுதலின் பேரில் அளிக்கப்பட்டதாக தெரிவித்து, முறையீட்டு மனு சம்பந்தமாக எந்தவொரு நடவடிக்கையும் எடுக்க வேண்டாம் என கேட்டுக்கொண்டுள்ள நிலையில், அலுவலக பணியாளர்களை மனுதாரர் தரக்குறைவாக பேசியதால் காவல்துறையில் புகார் செய்யப்பட்டு மனுதாரர் திரு.வ.கணேசன் அவர்கள் காவல்துறையில் மன்னிப்பு கோரியதால் புகார் மனு திரும்பப்பெற்றுக்கொள்ளப்பட்டது என்ற தேவகோட்டை நகராட்சி ஆணையரின் அறிக்கை, மேலாளரின் வாக்குமூலம் ஆகியவற்றை ஏற்று இப்புகார் மனு மீதான நடவடிக்கை எடுக்க முகாந்திரம் இல்லை என இம்முறை மன்ற நடுவம் கருதி அவ்வாறே ஆணையிடுகிறது.

2024ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள் 05–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1. திரு.வ.கணேசன்.,
   12ஜி, கைலாசநாதபுரம் மேற்கு,
   தேவக்கோட்டை, சிவகங்கை மாவட்டம்

2. நகராட்சி ஆணையர்,
   தேவக்கோட்டை நகராட்சி, தேவகோட்டை.

3. நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

4. ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
இராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்

இ.கோ/உதிரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

13/11/24

சட்ட ஆலோசகர்/செயலாளர்(முகூபொ)

தமிழ்நாடு மாநில உள்ளாட்சி அமைப்புகள் முறை மன்ற நடுவம்
சென்னை–600 032